**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன போக்குவரத்து (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 213ஈ(5) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்ள் நிதிக்கூற்றுகள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயம் மறுதலிப்பதற்கான அடிப்படை பகுதிகளில் கலந்துரையாடியுள்ள விடயங்களில் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் பொருட்டு போதியளவிலும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளையும் என்னால் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுதலிக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் எனபவற்றிற்கு முகாமைத்துவத்தும் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடுதல் எனது பொறுப்பாகும். எவ்வாறான போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயமொன்றை வழங்குவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள என்னால் முடியாதிருந்தது.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 06 கணக்கு விடயங்களுக்கு உரியதாக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியாக நிலவிய மீதிகள் மற்றும் அத்திகதியில் உள்ளபடியாக பேரேட்டில் காணப்பட்ட அந்த மீதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 32,090,890 ஆன இணக்கமின்மையொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், மீளாய்வாண்டுக்காக பரீட்சை மீதியொன்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆண்டினுள் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் பேரேட்டில் பதிவு செய்யப்படுவதுடன், நாளேட்டுக் குறிப்புகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நாளேட்டுப் பதிவுகள் ஆண்டின் இறுதியில் பேரேட்டில் பதியப்படுவதால் இணக்கமின்மையொன்று காணப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் மூல ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் ஒன்றுக்கொன்று இணங்கும் வகையில் கணக்குகள் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ஆ) திறைசேரி உண்டியல் வட்டி மற்றும் நிலையான வைப்புகளின் வட்டி வருமானத்திற்குரிய கணக்காய்வின் கணிப்பீடுகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் | காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், இதன் பின்னர் அட்டுறு அடிப்படையில் கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களிலுள்ள மீதிகள் ஆகியவற்றுக்கிடையே ரூபா 313,877 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | | |
| (இ) | செயற்பாட்டு மற்றும் நிர்வாக செலவினங்களுக்காக காசாக மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கு அட்டுறு அடிப்படையில் சீராக்கம் செய்யப்பட்டதன் பின்னர் பெறப்பட்ட மீதி மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்றில் மீதிகளுக்கிடையே ரூபா 93,188 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்.**

| இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய 1/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியின் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 877(2)ஈ பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் பிரதிகள் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயலாற்றல் பெறுபேறு ரூபா 5,089,187 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,082,958 ஆகும். அதற்கமைய நிதி பெறுபேறுகளில் ரூபா 6,229 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. ஆண்டின் வருமானம் ரூபா 29,930,223 இனால் குறைவுற்றமையை விட செயற்பாட்டு செலவினத்தின் ரூபா 29,936,453 ஆன வீழ்ச்சி இந்த அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2011 இன் 04 ஆம் இலக்க மோட்டார் வாகன (வெகுமதி மற்றும் ஊக்குவிப்பு நிதியம்) கட்டளைக் கோவையின் 03(1) கட்டளைக்கமைய வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளுக்காக தகைமைபெறும் 04 பணிகள் குறிப்பிடப்பட்டிருந்தன. எனினும், நிதியத்தின் ஆரம்பம் முதல் வெகுமதிக்காக காணப்பட்ட கீழ்வரும் 03 பணிகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிராததுடன், நிதியத்திற்கு கிடைத்த வருமானம் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளாக பதவியணிக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அந்த பணிகளுக்காக வெகுமதி செலுத்தும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் எனிக், தவறுதலாக வாகனங்களை தயாரித்தல் மற்றும் வாகனங்களுக்கு மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் ஆகியவற்றை குறைத்துக்கொள்ளும் இயலுமை காணப்படுகின்றது.<br><br>(i) மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது, ஏதேனும் மோட்டார் வாகனமொன்றினை தயாரித்தல், உற்பத்தி செய்தல், ஒருங்கிணைத்தல், புதிதாக நிர்மாணித்தல், பதிலீடு செய்தல், உருவத்தை மாற்றுதல் மற்றும் வடிவத்தினை மாற்றியமைத்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள நபர்கள் தொடர்பில் தகவல் வழங்கும் தரப்பினருக்கு பணம் வழங்குதல்.<br><br>(ii) சில தவறான செயற்பாடுகளை இனங்காணுவதற்காக வழங்கப்படும் அல்லது அவ்வாறான தவறான பணிகளை வெளிப்படுத்தும் நபர்களுக்கு வெகுமதி செலுத்துதல். | தவறான செயற்பாடுகள் தொடர்பிலான தகவல்களை வழங்கும் நபர்களிடமிருந்து தகவல் கிடைக்காமையால் இந்த பணத்தை செலுத்த முடியாதுள்ளது. | நிதியத்தின் அடிப்படை நோக்கங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்தமை. |

(iii) பாராட்டுக்குரிய அல்லது விசேட மதிப்பீடொன்று தேவைப்படும் திணைக்களத்தின் பதவியணியின் செயற்பாடுகளுக்காக வருடமொன்றுக்கு ரூபா 50,000 இனை விஞ்சாத வகையில் கொடுப்பனவு செலுத்துதல்.

(ஆ) வெகுமதிகள் மற்றும் விசேட மதிப்பீடுகளுக்காக மோட்டார் வாகன (மிகை அறவீட்டு) பிரமாணத்தை வரைபாக்கி 2017 மே 02ஆந் திகதி சட்ட வரையுநர் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டிருந்தது. எனினும், மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அவ்வாறு கட்டளைகளை தயாரித்து மிகைஅறவீடு செய்தல் அந்த சட்டத்தின் சில பிரிவுகளுடன் இணங்காதிருந்தமையால் உரிய கட்டளைகளை தயாரித்து மிகை அறவீடு விதிக்கும் பணியை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது.

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
| --- | --- | --- |
| பதவியணியை பயிற்றுவித்தல் மற்றும் விளையாட்டு மற்றும் பாராட்டுகளுக்காக ரூபா 200,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகள் நிறைவேற்றப்பட்டிராததுடன், நிதியத்தின் அடிப்படை நோக்கங்களான வெகுமதிகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டினுள் எந்த ஒதுக்கமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். | நடைமுறைச் சாத்தியமான முறையில் பாதீட்டு தொகைகள் தீர்மானிக்கப்படல். |